*(Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC.16/2021***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PSE – 1***

*Name / Father's Name:* ***திரு.ஞானராஜ் த/பெ. சபரிமுத்து***

*Village/ Taluk:*

*Caste, Religion:*

*Calling, Age:*

*Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of*
**03.06.2024.**
துவக்க நேரம் 12.18

**முதல் விசாரணை**

1) நான் தற்போது கோயம்புத்துார் வனச்செயல் திட்டம், வனச்சரக அலுவலகராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 07.02.2018ம் தேதி நான் கருமந்துறை வனச்சரக அலுவலகத்தில் வனச்சரக அலுவலராக பணிபுரிந்தபோது, அன்று காலை 10.00 மணியளவில் பெரியகல்ராயன்பிரிவு, சூலாங்குறிச்சி காப்புக்காடு, கரியகோயில் பீட், 8வது பிளாக்கில் உள்ள மேல்பூண்டி பகுதியில் உள்ள வனஎல்லைப்பகுதியில் எதிரி வெள்ளையன் த.பெ அண்ணாமலை என்பவர் வனநிலத்தினை விவசாய நிலமாக மாற்ற முயற்சித்து சுத்தம் செய்துகொண்டிருந்தார். மேற்படி எதிரியை பிடித்து விசாரித்து, அவரிடம் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்து, அதனடிப்படையில் அவரிடமிருந்து கொடுவாள்–1, மண்வெட்டி–1 மற்றும் தீப்பெட்டி ஒன்றை வனச்சரக சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றினேன்.

2) பின்னர் அங்கு வைத்தே மகஜர், H– நமுனா, உத்தேச வரைபடம், பீட் மேப் ஆகியவற்றை தயார் செய்தோம். புகைபடமும் எடுத்தோம். ஆக்கிரமிப்பு செய்த இடத்திற்கான GPS பாயின்டுகளையும் குறித்து எடுத்து அலுவலகத்தில் வைத்து மேப்பிங் செய்தோம். பின்னர் எதிரியை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினோம். வழக்கு விசாரணையை முடித்து ஆவணங்களுடன் அ–படிவத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன். **குற்ற ஒப்புதல் வாக்குமூலம் அ.த.சா.ஆ.1, மகஜர் ஸ்டேட்மென்ட் அ.த.சா.ஆ.2, H– நமுனா அ.த.சா.ஆ.3, பீட் மேப் அ.த.சா.ஆ.4, வரைபடம் அ.த.சா.ஆ.5, GPS பாயின்ட் குறித்த ஸ்கேட்ச் அ.த.சா.ஆ.6, சம்பவ இட புகைபடம் அ.த.சா.ஆ.7 ஆகும்.**

குறுக்கு விசாரணை

சம்பவ இடத்திற்கான சர்வே எண்–ஐ அ–படிவத்தில் குறிப்பிட்டு உள்ளீர்களா என்றால் இல்லை. மேற்படி பெருமாள் அவர்களுக்கு சொந்தமான இடத்தில் தான் அவர் வேலை செய்து கொண்டு இருந்தார் என்றும், அதனை சரிவர விசாரிக்காமல் எதிரி மீது புள்ளி விவர கணக்கிற்காக இவ்வழக்கு பதியப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்ட ஆவணங்கள் சம்பவ இடத்தில் தயார் செய்யப்படவில்லை என்றும், எங்களது அலுவலகத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. இவ்வழக்கில் தனிநபர் சாட்சிகள் யாரையும் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

முடிவு நேரம் 12.32

ஒம்/–S.அருண்குமார்,
நீதித்துறை நடுவர் எண்.2,
ஆத்தூர்.